**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

பொதுப்பணிகள் - "காந்தி கிராம ஊரக கல்விக் கழகத்தினால் வழங்கப்படும் காதி மற்றும் கைத்தறி நுட்பவியல் பட்டயத்தினை'' துணிநூல் தொழில் நுட்பவியல் பட்டயம்" மற்றும் "கைத்தறி நுட்பவியல் பட்டயம்" ஆகியவற்றுக்கு (Diploma in Textile Technology and Diploma in Handloom Technology) இணையாகக் கருதி அங்கீகரித்தல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (ஆர்) துறை**

அரசு ஆணை (நிலை) எண் 71
நாள்: 4.7.2002

படிக்கப்பட்டது:

1. அரசு ஆணை (நிலை) எண் 441, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை,
   நாள் 10.12.93.
2. காந்தி கிராம ஊரக கல்விக் கழக கடித எண் ஏசி3/93/ரெக்/97-98/314 நாள் 20.8.97.

படிக்கப்பட்டது:

3. தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலரின் கடித எண் 6190/விமஅது-ஊ1/93 நாள் 28.11.2001.

-----

ஆணை:

பார்வை இரண்டில் காணும் கடிதத்தில், காந்தி கிராம ஊரகக் கல்வி கழகம் அதனால் வழங்கப்படும் ''காதி மற்றும் கைத்தறி தொழில் நுட்பவியல் பட்டயத்தினை", "துணிநூல் தொழில் நுட்பவியல் பட்டயம்" மற்றும் "கைத்தறி நுட்பவியல் பட்டயம்" ஆகியவற்றுக்கு இணையாகக் கருதி அங்கீகரித்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டது. அதற்கிணங்க, பார்வை ஒன்றில் காணும் அரசாணையின்படி அமைக்கப்பட்டுள்ள, இணைக் கல்வித் தகுதி

பரிசீலிப்புக் குழுவின் முன்னர், பரிசீலனைக்காகவும் மற்றும் பரிந்துரைக்காகவும் மேற்காணும் கோரிக்கை வைக்கப்பட்டது.

2) 8.11.2001 அன்று நடந்த குழுக் கூட்டத்தில் இப்பொருள் குறித்து பரிசீலிக்கப்பட்டு, காந்தி கிராம ஊரகக் கல்விக் கழகத்தினால் வழங்கப்படும் "காதி மற்றும் கைத்தறி நுட்பவியல் பட்டயத்தினை" "துணிநூல் தொழில் நுட்பவியல் பட்டயம்" மற்றும் "கைத்தறி நுட்பவியல் பட்டயம்'' ஆகியவற்றுக்கு இணையாகக் கருதலாம் என இணைக் கல்வித் தகுதி பரிசீலிப்புக் குழு பரிந்துரை செய்தது.

3) இணைக் கல்வித் தகுதி பரிசீலிப்புக் குழுவின் பரிந்துரையை அரசு தீவிர பரிசீலனைக்குப்பின் ஏற்றுக்கொள்ள முடிவெடுத்துள்ளது. அவ்வாறே காந்திகிராம ஊரகக் கல்வி கழகத்தால் வழங்கப்படும் ''காதி மற்றும் கைத்தறி நுட்பவியல் பட்டயத்தினை" (Diploma in Khadi and Handloom Technology) "துணிநூல் தொழில் நுட்பவியல் பட்டயம்" மற்றும்" கைத்தறி நுட்பவியல் பட்டயத்திற்கு" (Diploma in Textile Technology and Diploma in Handloom Technology) இணையாக அங்கீகரித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுகவனேஷ்வர்,

அரசு தலைமைச் செயலாளர்

பெறுநர்

அனைத்து அரசு செயலாளர்கள், சென்னை-9.
அனைத்து துறைத் தலைமை அலுவலர்கள்,
செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2.
பதிவாளர், அண்ணா பல்கலைக் கழகம், சென்னை-25.
காந்தி கிராம ஊரக கல்வி கழகம், காந்திகிராமம், திண்டுக்கல்.
செயலர், கைத்தறி, கைவினை, துணிநூல் மற்றும் கதர் துறை, சென்னை-9.

நகல்:

முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த துறை அனைத்து பிரிவுகள், சென்னை-9

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்